விநாயகர் அகவல்

1.அறிமுகம்

சித்தர்களின் இலக்கியத்தில் அவ்வையின் குறள் நூல் தனியானதோர் பெருமை பெற்று விளங்குவது போலவே, அவ்வை இயற்றிய விநாயகர் அகவலும் பெருமை பெற்று விளங்குகிறது. ஆனால் இந்த இரண்டு நூல்களுக்கும் உரிய அணுகுமுறைகள் வெவ்வேறாம்.

அவ்வையின் குறளானது, அமைப்பிலும் போக்கிலும் கட்டுக் கோப்பிலும் ஓர் இலக்கண நூலைப் போன்றது. அவ்வையின் விநாயகர் அகவலோ ஒரு காப்பியத்தைப் போன்றது. குறளை ஓர் இலக்கணநூல் என்று சொன்னால் , அகவலை ஒரு பக்தி நூல் என்று கூறவேண்டும்.

அவ்வையின் குறளானது சித்தர்களின் சாத்திர நூலாகத் திகழ்கிறது. அகவலோ தோத்திர நூலாகத் திகழ்கிறது.

சாத்திர நூலாகத் திகழ்வதால் அவ்வையின் குறளானது குறட்பாவின் யாப்பிலே அமைந்துள்ளது. கருத்தின் செறிவு இந்த யாப்புக்கு இயைபு கொண்டதாய் அமைந்துள்ளது.

அகவலோ தோத்திரமாக இருப்பதால் அகவுகின்ற பாங்கிலே நூலின் தொடக்கத்திலிருந்து முடிவுரை பாடி ஓதுகின்ற பான்மையிலே செல்கின்றது.

இந்த இரண்டு நூல்களும் கவி அமைப்பிலே இவ்வளவு மாறுபட்டு இருப்பதால், அவ்வையின் குறளைத் தொல்காப்பியம் அல்லது நன்னூலைப் போன்று கற்றுத் தெளிந்து உணர வேண்டியுள்ளது. ஆனால் அகவல் அப்படி இல்லை. அது வழிப்பாட்டின்போது பாராயணம் செய்வதற்கு உரிய முறையிலே செம்பாகமாக ஓடுகிறது.

குறட்பாவும் அகவற்பாவும் வெண்டளைகளால் ஆன செய்யுள் வடிவங்களே ஆயினும், அவற்றின் கட்டுக்கோப்பிலே இத்தனை பெரிய வேறுபாடு காணக்கிடக்கிறது. இக்காரணத்தினாலேதான் குறட்பாவை ஆசான் என்று அழைப்பதும், அகவலை அன்னை என்று அழைப்பதும் ஒரு சித்தர் மரபாகும்.

இரண்டு நூல்களுமே சித்தர்களின் ஞானத்தை உள்ளடக்கிய கவிக்களஞ்சியங்களாக இருப்பினும், முன்னதை உபதேசிக்கிற குரு என்றும், பின்னதைப் பக்தி அமுதம் ஊட்டும் அன்னை என்றும் சித்தர்கள் போற்றி வந்திருக்கின்றார்கள்.

அவ்வையாரின் குறள் நூல் மக்களிடையே விரிவாக பரவாமல் இருப்பதற்கும், விநாயகர் அகவல் மக்களிடையே நன்கு பரவி இருப்பதற்கும் ஒரு முக்கிய காரணம், அவற்றின் அமைப்பில் உள்ள இந்த வேறுபாடுதான்.

அதனோடு குறள் நூலானது உபதேச நூல் என்ற முறையிலே மூன்று பாலாக பிரிவுபட்டு ஒவ்வொரு பாலும் ஞானப் பயிற்சியின் ஒவ்வொரு துறையைப் படிப்படியாக எடுத்துக் கூறும் பாடநூலாக யாக்கப் பெற்றுள்ளது.

அகவலோ என்றால் ஒரே பாடலாக யாக்கப்பட்டு, தொடக்கத்திலிருந்து முடிவுவரை, துதிப்பாடலுக்குள்ளே ஞானத்தைக் குழைத்துத் தருகிறது. எனவே தோத்திர வழிபாடு செய்யும் பக்தர்களில் பலரும், தங்கள் பாராயணத்தில், விநாயகர் அகவலுக்கு ஒரு முக்கிய இடம் தந்து ஓதி வருகிறார்கள்.

இந்த இரண்டு நூல்களும் யாப்பு முறையில் வேறுபடுவதோடு கூடக் கருத்தின் ஆட்சிமுறையிலும் வேறுபடுகின்றன.

குறளானது ஆராய்ச்சியின் பாற்பட்டது. அகவல் தொகுப்பின் பாற்பட்டது. முந்தையது பிரித்துப் பிரித்து, நுணுகி நுணுகி, அலசிப் பார்க்கிற முறையில் அமைந்தது: பிந்தையது தொகுத்துத் தொகுத்து, அடுக்கி அடுக்கி, தொடுத்துத் தொடுத்துச் செல்கிற பாங்கில் அமைகிறது.

இந்த இரண்டு நூல்களும் அமைப்பிலே வேறுபட்ட போதிலும் ஒரே தரமான ஆர்வத்தோடு சித்தர் உலகத்தில் பன்னூறு ஆண்டுகளாகப் பயின்று வருகின்றன. இதற்கு காரணம் இந்த இரண்டு நூல்களுமே சித்தர் ஞானத்தின் செம்பொருளைக் கூறும் உயர்தனி இலக்கியங்களாக ஒளிவீசுவதே ஆகும்.

சித்தர்களின் ஞான ரகசியங்களை ஆராய்ந்து கற்கும் மாணவன் அவனுடைய பயிற்சியின் முன்னேற்றத்திற்கு ஒரு பாராயண நூலைக் கையாள விரும்புவது இயல்பேயாகும். அப்படிப்பட்ட மாணவனுக்கு அவ்வையின் அகவல் கைகொடுத்து உதவுகிறது.

சித்தர்கள் தமிழகத்திலே நமக்கு வழங்கியுள்ள ஞானச் செல்வங்கள் விரிந்து பரந்து கிடப்பனவற்றை ஒன்று திரட்டி அவ்வையார் குறட்பாவாகச் செய்து தந்தார். அந்த ஞானத்தின் அனுபவத்தை மெய்யுறுகித் துய்க்கும் வண்ணம் அவரே அகவலும் செய்து தந்தார். அந்த அகவலிலும் குறளின் ஞான மணம் அத்தனையும் அப்படியே கமழ்கிறது.

அப்படியானால் மிக எளிய முறையிலே வழிபாட்டில் ஓதப்படுகிற அகவலுக்குள்ளும் மாபெரும் ஞான இரகசியங்கள் பொதிந்துள்ளனவா என்று கேட்கலாம்; ஆம். பொதிந்து, செறிந்து புதையலாகவே கிடக்கின்றன. வருகிற பக்கங்களில் அவற்றை விரிவாக நாம் காணப் புகும் முன்பு இரண்டே இரண்டு சான்றுகளை மட்டும் இங்கே எடுத்துக் காட்டலாம்.

விநாயகர் அகவலில் பலரும் பாராயணம் செய்கிற ஒரு வரி,

நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

என்பதாகும். இதுபோலவே பலருக்கும் மனப்பாடம் ஆகியுள்ள இன்னொரு வரி,

கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

என்பதாகும்.

பலருக்கும் நன்கு தெரிந்த இந்த இரண்டு வரிகளில் நிகண்டு பார்த்துப் பொருள்கொள்ள வேண்டிய எந்தச் சொல்லும் இல்லை என்றாலும் சித்தர் நெறியைப் பயில்கின்ற யோகிகள் எல்லாரும் 'நீலமேனி' என்பதற்கும், 'மெய்த்தொண்டர் குழாம்' என்பதற்கும் நீண்ட பெரும் விரிவுரைகள் தந்துள்ளார்கள். அந்த இரண்டு சொற்றொடர்களையும் சித்தர்களின் ஞானக் கருவூலங்கள் என்றே சொல்ல வேண்டும்.

இந்த உலகில் உள்ள நடப்பனவும் நிற்பனவும் ஆகிய சராசரங்களை ஆராய்ந்து பார்த்துள்ள விஞ்ஞான மேதைகள். அண்மைக் காலத்தில் ஒரு மிகப்பெரிய அறிவியல் நுட்பத்தை ஆராய்ந்து கண்டு பிடித்து சொல்லியிருக்கிறார்கள். அதுதான் **'Etheric body'** அல்லது நுண்ணுடல் ஆகிய ஒலி உடம்பு ஆகும். இதை முதலாவது ஆய்வு நூல் பகுதியில் மேல் நோக்கிலே பார்த்தோம். இதன்படி, உயிர்கள் அனைத்திற்கும் அவை தாங்கியுள்ள பரு உடலை சுற்றி நுட்பமான வான்துகளால் ஆகிய நுண்உடல் இருக்கிறது. என்பதை இன்றைய அறிவியல் வல்லுநர்கள் மெய்ப்பித்து காட்டியிருக்கிறார்கள். இதை **'Etheric double'** என்றும் இன்றைய விஞ்ஞானம் அழைக்கிறது.

'நீலமேனி' என்ற சொல்லுக்குச் சிவயோகி இரத்தின சபாபதியார் இந்த பொருளையே தமது ஞான பேருரையில் எடுத்துகூறுகிறார். இதையே விநாயகரின் வேழ முகமாகவும் தும்பிக்கையாகவும் பொருள் கூறுகிறார் சிவயோகியார்.

மனித உடம்பிலே நமது பின் மூளையில் உள்ள **'pineal gland'** என்னும் சுரப்பியின் ஆற்றலும், முன் மூளையில் உள்ள **'pituitary gland'** என்னும் சுரப்பியின் ஆற்றலும் பொருந்தும்பொழுது நீல ஒளி தோன்றுகிறது என்றும், இந்த நீல ஒளியின் பரிணாமத்தோடு ஒளி உடம்பாகிய **'Etheric Double'** இயைகிறது என்றும் பொருள் சொல்லி, இவற்றின் நுட்பங்களை மிக விரிவாக ஞானிகள் நமக்கு எடுத்துக் கூறுகிறார்கள்.

'நீலமேனி' என்பதைப் போலவே, 'மெய்த்தொண்டர் குழாம்' என்பதற்குப் பொருள் சொல்லுகிற யோகிகள், நம்மோடு வாழ்கின்ற மெய்யடியார்களாகிய தொண்டர் குழாத்தை இச்சொற்றொடர் குறிக்கவில்லை என்று கூறி, மிக நுட்பமான உட்பொருள் தருகிறார்கள்.

இந்த உலகத்தில் ஞானப் பயிற்சி செய்யப் புகும் ஒரு மாணவனை ஞான குரு ஆட்கொள்ளும் பொழுது, அவனைத் தம்மோடு கூடவே மெய்த்தொண்டர் குழாத்தையும் சேர்த்து இணைத்துக் கொள்கிறார். இந்த இணைப்புத்தான் அவனுடைய ஆன்ம

வளர்ச்சிக்கு இரவும் பகலும் உறுதுணையாக அமைகிறது. குருநாதன் இவ்வாறு மாணவனை இணைக்கின்ற மெய்த்தொண்டர் குழாமானது, ஆதி குருவான பரம குருவிலிருந்து தொடங்கி, நேர்நின்று உணர்த்துகின்ற குருநாதன் வரை வழிவழியாக விளங்கி வருகின்ற ஞானியர் குழுவாகும்.

இந்தக் குருஞானக் குழுவானது அன்றிலிருந்து இன்றுவரை மாறுதலோ மறைதலோ இல்லாது என்றென்றும் நிலைபெற்று நின்று வருகின்றது. இந்த மெய்த்தொண்டர் குழாமானது ஞானப் பயிற்சியில் ஈடுபடுகிற மாணவனுக்கு அவனுடைய உள் உடம்பில் புகுந்து துணை செய்கின்ற மாபெரும் ஞானத் திருக்கூட்டமாகும்.

உலக நாடுகள் அனைத்திலும் உள்ள மகான்களும் ஞானிகளும் இந்தத் திருக்கூட்டத்தை **'Unseen Masters'**என்றும், **'Invisible Helpers'** என்றும் அழைக்கிறார்கள். இந்த மெய்த்தொண்டர் குழாத்து ஞானிகள், உருவத்தில் அல்லது அருவத்தில் நின்று மாணவனுக்கு உதவி செய்கிறார்கள். எல்லா வகையிலும் உறுதுணையாக நிற்கிறார்கள்.

ஞானம் பயில்கின்ற ஒரு மாணவனை இத்தகைய மெய்த் தொண்டர் குழாத்திலேதான் ஒப்படைக்கிறார்கள், குருமார்கள்! நேருக்கு நேராகதாங்கள் உதவி செய்வதோடு, அருவ நிலையிலும் ஞான உதவி அந்த மாணவனுக்கு எய்துகின்ற முறையில் , அந்த மெய்த்தொண்டர் குழாத்திலே கூட்டுகிறார்கள் ஞானாசிரியர்கள். இந்த உண்மை சித்தர் உலகத்தில் வழிவழியாக வழங்கி வருகின்ற ஒரு பெரிய இரகசியமாகும். இந்த இரகசியத்தைத்தான் 'மெய்த்தொண்டர் குழாம்' என்ற சொற்றொடர் உணர்த்துகின்றது என்பது சித்தர் கருத்தாகும்.

எனவே, விநாயகர் அகவல் என்ற நூலானது மேலாகப் பார்க்கும் பொழுது ஒரு தோத்திர நூலைப் போன்று காட்சி தரினும், அதன்கண் பயின்று வந்துள்ள சொற்றொடர்களிலே குறட்பாவில் கூறப்பட்டுள்ள சித்தர் ஞானத்தின் உட்பொருள் அனைத்தும் பொதிந்துள்ளது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அதே சமயம் ஞானத்தை உபதேச முறையில் அல்லாமல், உணர்ச்சியின் நெகிழ்வோடு குழைத்துச் சொல்கிற கவியமைப்புக் கொண்டதாக அகவல் அமைந்துள்ளதால் ஞானம் அறிவிலிருந்து உணர்வுக்குள் பாய்ந்து விடுகிறது.

அதோடுகூட, ஞானமோனத்திலிருந்து பிறந்த பேருணர்வின் படைப்பாக இந்த நூல் அமைந்துள்ளதால், அந்தச் சொற்களை ஓதும் பொழுதே அவற்றில் ஓர் மந்திர ஆற்றல் மெய்யூடு புகுந்து செல்லக் காணலாம். 'நிறைமொழி மாந்தர்ஆணையிற் கிளந்த மறை மொழி' யாக இந்த அகவல் அமைந்திருப்பதால், பாராயணம் செய்யும் பொழுதே அவ்வாறு செய்பவருடைய உடம்பில் மந்திர ஆற்றல் பாய்ந்து விம்முகிறது. இது காரணமாக, அருளாற்றல் என்ற ஆன்மசக்தி நாள்தோறும் வளர்ந்து, படிப்படியாகப் பரிப்பக்குவம் ஏற்படுகின்றது.

வழிபடும் அடியார்களுக்கு நாளடைவில் இந்த ஆற்றல் மேலும் மேலும் வளர்ந்து அவர்களுடைய நீல மேனியும் ஒளியுடம்பும் வளர்கின்றன; உயர்கின்றன. பரம்பொருளின் பேராண்ம அனுபவம் தலைப்படுகிறது. இந்த அனுபவம் விநாயகர் அகவலுக்கே உரிய ஒரு சிறப்புப் பயனாகும்.

ஆம்; அவ்வையின் குறளைக் கற்றுணரும் மாணவன், சித்தர் ஞானத்தின் வகை தொகைகளைத் தெரிந்து பயிலத் தொடங்குகிறான். அகவலை ஓதுகின்ற பாராயணயத்திலே அவன்தான் பெற்ற அறிவுக்கு உரிய அனுபவத்தைத் துய்க்கத் தொடங்குகிறான். முந்தையது கல்வியாக அமைகிறது; பிந்தையது அதன் பயனாக அமைகிறது. ஆகையினால்தான், அவ்வையின் குறளுக்கு எத்தனை சிறப்பை யோகிகள் தருகிறார்களோ, அத்தனை சிறப்பையும் அவ்வையின் அகவலுக்கும் தருகிறார்கள்.

இனி, அவ்வையின் அகவலில் உள்ள ஒரு சமுதாயப் பலனை இங்கே குறிப்பிட வேண்டும். அதுதான் பாராயணம் என்ற சாதனத்தில் உள்ள ஒரு பெரிய மாண்பாகும்.

குறளை ஒருவன் கற்கலாம் பலருக்குக் கற்பிக்கலாம், அறிவுக்கு ஈடற்ற பயன் உண்டு, ஐயமில்லை. ஆனால், அகவலின் செயல் வேறுவிதமானது. ஒருவன் அதைப் பாடலாம். பலர் அதைக் கேட்கலாம்; அல்லது சேர்ந்து பாடலாம். பயனோ என்றால் அனைவருக்குமே ஒரே சமயத்தில் கிட்டுகிறது.

பாடுபவன், சேர்ந்து பாடுபவன், அல்லது உள்ளம் சேர்ந்து கேட்பவன் ஆகிய அனைவரையும் விநாயகர் அகவலின் மந்திர ஆற்றல் வளைத்து அணைக்கிறது. எல்லாருக்கும் பரவசம் என்ற பேரின்ப அனுபவத்தை ஒரு சேரத் தருகிறது. மந்திரமும் தோத்திரமும் புரிகிற ஆன்ம வினை என்பது இதுவே.

சொல்லும், அதன் பொருளும், அவற்றின் மந்திர ஆற்றலும் உள்ளங்களை எல்லாம் பிணைத்துப் பேரின்பம் என்கிற மின்சார ஆற்றலைப் பாய்ச்சுகிற வல்லமை இதுவேயாகும். அந்த வல்லமை அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு மின்கலமாகத் திகழ்கிற ஓர் அரிய நூலே அவ்வையார் அருளிய விநாயகர் அகவலாகும்.

2. குறிக்கோள்

விதி என்றும், வினை என்றும், ஊழ் என்றும் பல சொற்களிலே பிறவியின் சட்டத்தையும் அமைப்பையும் அழைக்கிறோம். இந்த விதியை மாற்றவே முடியாது என்றும், பிறக்கும் பொழுதே நாம் கொண்டுவருகிற வாழ்க்கையின் அமைப்பு முறை அது என்றும், இந்து சமயத்தின் எல்லாப் பிரிவினர்களும் சொல்கிறோம். அவ்வாறே சாக்கியரும் சமணரும் கூறுகிறார்கள். சமண காப்பியமாகிய சிலப்பதிகாரம் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்றே பாடுகின்றது. சாக்கிய காப்பியமாகிய மணிமேகலையும் இங்ஙனமே வற்புறுத்துகிறது. முற்பிறவியில் கோவலன் செய்த வினையே அவன்கொலையுண்டதற்குக்காரணமாக அமைந்தது என்பதைப்பல முறைகளிலே

இளங்கோவடிகள் எடுத்துக் கூறுகிறார். சாத்தனார் சித்தரிக்கிற மணிமேகலையின் துறவும் ஊழ்வினையின் ஓவியமே. இந்த முறையிலேயே இராமாயணக் காப்பியமும் மற்றைப்பழம் பெரும் காப்பியங்களும் ஊழ்வினையை வற்புறுத்துகின்றன.

நமது நாட்டில் மட்டுமல்லாமல் எகிப்து, பாரசீகம் போன்ற நாடுகளிலும் ஊழ்வினையின் விளைவைப் பற்பல காப்பியங்களாக உலகப் பெருங்கவிஞர்கள் வடித்துத் தந்திருக்கிறார்கள்.

பாரசீகக் கவிஞன் உமர்க்ய்யாம் விதியின் வல்லமையை மிக அழகாகப் பாடுகிறான்.

The Moving Finger writes

விதியின் கையானது மனித மண்டையிலே எழுதுகிறது; எழுதிக்கொண்டே செல்கிறது. நாமும் இதையே தலையெழுத்து என்கிறோம். அயன் எழுதிய 'லலாட லிபி', நெற்றி எழுத்து, என்று நம் பெரியோர்கள் இதையே அழைத்தார்கள்.

பாரசீகக் கவிஞன் பாடுகிறான் :-

விதியின் கை எழுதுகிறது; எழுதிக்கொண்டே செல்கிறது. அது **'Moving Finger'**. ஒரு தலையில் எழுதி முடித்துவிட்டு, அடுத்த தலையில் எழுதத் தொடங்குகிறது.

The Moving Finger writes; and, having writ, Moves on

ஒரு தலையை முடித்துவிட்டு அடுத்த தலையெழுத்தைத் தொடங்குகிறது. ஒரே வேகம்; ஒரே உறுதி.

.... Nor all thy Piety nor wit
Shall lure it back to cancel half a Line

உன்னுடைய தூய்மை, புனிதம், அல்லது உனது சாமர்த்தியம், கெட்டிக்காரத்தனம் - அது ஒன்றும் விதி எழுதின அந்த எழுத்தின் பாதி வரியைக்கூட அடிக்கும்படி, அழிக்கும்படி, வேண்டவோ, இசைவிக்கவோ இயலாது. அந்த வரியின் பாதியைக்கூட உன்னுடைய தூய்மையாலும் திறமையாலும் அழித்துவிட முடியாது. உன் பருப்பு அங்கே வேகாது. அது மட்டுமா?

Nor all thy tears wash out a word of it.

நீ ஆறாகக் கண்ணீர் வடித்தாலும் அந்தக் கண்ணீர் வெள்ளம் விதியின் எழுத்திலே ஒரு சொல்லைக் கூடக் கழுவி அலம்பிவிட முடியாது.

The moving Finger writes; and, having writ
Moves on; nor all thy piety nor wit
Shall lure it back to cancel half a line,
Nor all thy tears wash out a word of it.

'அயன் நம்முடைய தலையிலே உலக்கையினால் எழுதிவிட்டான். அன்று எழுதிய எழுத்தை அழித்து எழுத முடியாது' என்று ஓங்கி அடித்துவிட்டான் உமர் கய்யாம்.

ஆனால் நமது தமிழ்நாட்டு ஞானிகள் அப்படிச் சொல்லவில்லை. அருணகிரியார் பாடுகிறார்:

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரும் வெற்பும் அவன்
கால்பட் டழிந் ததிங் கென்தலை மேல் அயன் கையெழுத்தே

முருகப் பெருமானுடைய திருவடியிலே என் தலையைக் கொண்டு வைத்தேன். என்ன ஆயிற்று?

அவன் கால்பட் டழிந்ததிங்கு என் தலைமேல் அயன்
கையெழுத்தே

பாட்டின் கடைசி வரியில் வருகிற தேற்றேகாரம் கட்டளைக் கலித்துறையின் வலிமை அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, உறுதியோடு கையில் அடித்துச் சத்தியம் செய்கிறது. 'அவன் கால்பட்டு அழிந்தது அயன் எழுதிய என் தலையெழுத்து' என்று ஒரே உறுதிப் பாட்டோடு பாடுகிறார் அருணகிரியார்.

கரும்பலகையிலே ஆசிரியர் வெண்கட்டியினால் எழுதிய எழுத்தைத் துணி கொண்டு அழிப்பதுபோல், விதியின் எழுத்தை முருகன் அழித்துவிட்டான். கையினால்கூட அழிக்கவில்லை; காலினாலேயே செய்துவிட்டான் அந்த செயலை. அப்படிக்கூட இல்லை; அவன் அழிக்கவில்லை. 'கால்பட்டு அழிந்தது' என்று தன்வினையாக ஊழ்வினையைப் பாடுகிறார் அருணகிரியார். அவன்கால்என் தலைமேல் பட்டது; அவ்வளவுதான். ஊழ்வினை தானாகவே அழிந்து விட்டது. வினைச்சுழல் கழன்றோடிவிட்டது என்பது கவிவாக்கு.

ஆகவே, அன்று எழுதிய எழுத்தை அழிப்பதற்குரிய உபாயம் ஒன்று இருக்கிறது. அதுவே திருவடிப்பேறு என்று ஆகிறது அல்லவா!

இந்த திருவடிப்பேறு நமக்கு எப்படிக் கிடைக்கும்? எல்லாருடைய தலையிலும் எல்லா எழுத்தும் அழிந்து விடுமா? அந்தத் தலையை அந்தத் திருவடியிலே எப்படி வைப்பது? அதன் அணுகுமுறை என்ன?

இந்தக் கேள்விகளுக்கு விடைசொல்வது போல் அமைந்துள்ள நூல்களே அவ்வையின் குறளும், அவ்வையின் அகவலுமாம். ஏனென்றால் இந்தவிதியை வெல்லும் வழிதான் சித்தர்களுடைய ஞானம். இதற்குரிய பயிற்சி நூல்களே இவை இரண்டுமாம். இந்தச் சாதனையை இவை எப்படிச் செய்கின்றன?

ஏற்கனவே வரையறை செய்துவிட்ட வாழ்க்கையின் விதி அமைப்பை, ஞானம், பக்தி ஆகிய இரண்டு விதத்திலும் மாற்றலாம் என்று சித்தர் இலக்கியங்கள் கூறுகின்றன. இந்த முறைகளை ஆராய்வதற்கு உறுதுணையாக விதியைப்பற்றிய கொள்கையைப் பார்த்தது போலவே, காலம் என்ற தத்துவத்தையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்க்கவேண்டியது அவசியமாகும்.

காலம் என்ற கணக்கின் தத்துவத்தை நுணுகி ஆராய்ந்துள்ள இன்றைய மேனாட்டு அறிவியற் தத்துவ ஞானிகள், காலத்தை மூன்று கொள்கைகளிலே பேசியிருக்கிறார்கள்.

காலம் என்ற அடிப்படையை மனித வாழ்வோடு இணைத்து ஆராய்ந்துள்ள இன்றைய விஞ்ஞானிகள் **'cosmo-biology'** என்ற 'வான்புணர் உடற்கூற்று அறிவியல்' ஆகிய நவீன ஆராய்ச்சியின் பாங்கிலே மூன்று வகையில் பிரித்தார்கள்.

மனித வாழ்வின் நிகழ்ச்சிகள் **'cause and effect'** என்ற காரணமும் விளைவும் என்னும் சட்டப்படி, காலம் செல்கிறது என்பது முதலாவது கோட்பாடு. அதாவது 'விரை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்காது' என்றும், 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்! தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்றும், நாம் சொல்கிற ஊழ்வினையும் அதன் பயனும் இந்தக் கோட்பாட்டின் பாற்பட்டவை. இறந்த காலத்தின் வினை நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் பிணைக்கின்ற விளைவாக முளைக்கிறது. என்பதுவே காலம் பற்றிய இந்த முதலாவது கொள்கையின் விளக்கம். இந்து சமயம், சமணம், சாக்கியம் முதலிய மத நூல்களான காப்பியங்கள் வற்புறுத்துவதும் இதுவேயாகும்.

காலம் பற்றிய இரண்டாவது கோட்பாடு, **'The dimensional theory'** என்கின்ற காலப்பாதை என்னும் சித்தாந்தமாகும். இதுவே நான்காவது பரிமாணம் என்று அழைக்கப்படுகின்ற **'Fourth Dimension'** என்னும் காலப் பாதை என்பது. அதாவது நீளம், அகலம், ஆழம் அல்லது உயரம் என்னும் மூன்று அளவைகளோடு காலம் என்பது நான்காவது அளவையாகும். இதுவே காலப்பாதை என்பது.

கருத்து என்னவென்றால், காலம் என்ற பாதையிலே நாம் நடந்து செல்கிறோம். நம்முடைய வாழ்வின் நிகழ்ச்சிகள் அவ்வப்போது புதிதாக உண்டாவதில்லை. ஏற்கனவே காலப் பாதையிலே அங்கங்கே இந்த நிகழ்ச்சிகள் ஒத்திகை செய்யப்பட்டு நம் வரவுக்காகக் காத்து நிற்கின்றன. அவை நடப்பதில்லை; நாம் நடந்து சென்று அவற்றைச் சந்திக்கிறோம்! இதுவே காலத்தைப் பற்றிய இரண்டாவது கோட்பாடு. திருமூலரும் இதனையே,

போகின்ற காலங்கள் போவ தில்லையாம்

என்கிறார்.

இனி, காலத்தைப் பற்றிய மூன்றாவது கோட்பாடு; இதற்கு **'The Circular Theory'** என்று பெயர். அதாவது காலம் என்பது ஒரு சக்கரம்; ஆழி அல்லது சுழல்வட்டம். அது நில்லாது, சோராது, ஓயாது, சுழன்று கொண்டே இருக்கிறது! நிகழ்ச்சிகள் எல்லாம் அந்தச் சுழற்சியிலே மாறி மாறி வட்டமிட்டு வருகின்றன. பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் தமது அஷ்டப் பிரபந்தத்தில் 'காலத் திகிரி' என்றே அழைக்கிறார்.

காலத்திகிரி தலைநாளில் இட்ட கோலங்களே

என்றே பாடுகிறார். திருமூலரும் 'காலச்சக்கரம்' என்றழைக்கிறார்.

இன்றைய அறிவியல் ஞானிகள் . இந்தக் கால வட்டக் கோட்பாட்டிலே என்ன சொல்கிறார்கள் என்றால், ஒரே நிகழ்ச்சியானது பல்லாயிரம் ஆண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் திரும்ப முன்

போலவே அப்படியே நடக்கிறது. பிறகு இதே இடைவெளிக்குப் பின் மறுபடியும் நடக்கிறது. மீண்டும் மீண்டும் நடைபெறுகிறது.

'History repeats Itself' வரலாறு மீண்டும் மீண்டும் திரும்புகிறது. அதாவது, இன்று நாம் இருவர்இந்த இடத்தில் இப்போது சந்திக்கிறோம் என்றால், இதேபோன்று நாம் இருவரும் இதற்கு முன்பு இதே இடத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சந்தித்தோம். மறுபடியும் நாம்இருவரும் இதேபோன்று பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இதே இடத்தில் இவ்வாறே சந்திப்போம். இது ஒரு தொடர் நாடகம். இடைவெளி விட்டு மீண்டும் மீண்டும் நடைபெறுகிற ஒரு சங்கிலித் தொடர் நிகழ்ச்சி இது. இதுவே காலவட்டம் என்ற சுழற் தத்துவம்!

இந்தக் கோட்பாடுகளை ஆராய்ந்த ஒரு ஜெர்மன் தத்துவஞானி இன்னொரு கொள்கையைக் கண்டுபிடித்தார். அதற்கு **'Theory of Interference'** என்று பெயர். தலையீட்டுத் தத்துவம் என்ற இந்தக் கொள்கையின் படி, ஒரே நிகழ்ச்சி பல்லாயிரம் ஆண்டுகள் கழித்துக் காலச் சக்கரத்தின் சுழற்சியிலே மீண்டும் சுழலும் போது, வேறொரு ஆற்றல் உட்புகுந்து, தலையிட்டு அந்தச் சுழற்சியின் போக்கைச் சிறிதே மாற்றலாம்.

ஜெர்மன் ஞானி சொல்வதன் உட்கிடை என்னவென்றால், ஒரே நிகழ்ச்சி பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து, மறுபடியும் சுற்றத் தொடங்கும்போது யாரோ ஒருவர் அல்லது ஒரு சக்தி தலையிட்டு, அதன் சுழற்சிக் கோட்டிலிருந்து அதைச் சற்றே நகர்த்திவிட முடியும். அப்படிச் செய்வதால் அந்த நிகழ்ச்சி வேறுவிதமாக மாறிச் சுழலத் தொடங்கிவிடும். இதுவே 'தலையீடு' அல்லது **'Interference'** என்பது. ஒருவன் ஒன்று செய்வது இந்தத் தலையீட்டினால் மாறி ஒன்று பிறிதாகலாம்; அல்லது ஒன்று நடவாமலே போய்விடலாம்.

ஜெர்மன் தத்துவஞானி சொல்கிற தலையீட்டு ஆற்றல் செய்கிற செயலினால் அந்த மாறுதல் நல்லதாகலாம்; அல்லது பிறிதொரு தீங்காகலாம். ஆனால் நம்முடைய நாட்டுச் சித்தர்கள் இதையே வேறுவிதமாகச் சொன்னார்கள். மாறுதல் என்பது இறைவனுடைய தலையீட்டினால் நல்லதாகவே நடைபெறும் என்றார்கள் நம் ஞானிகள்.

மனித ஆற்றலின் தலையீட்டினால்அல்ல, இறைவனுடைய திருவருளின் தலையீட்டினால், ஏற்படுகிற மாறுதல் பேரின்பப் பெரு மாறுதலாகவே அமையும். அவன் கால்பட்டு நம் தலைமேல் தீய எழுத்து நல்ல எழுத்தாக மாறிவிடும் என்றார்கள் ஞானிகள். இதையே அவர்கள் தலையீடு என்று சாமானிய வார்த்தையில் சொல்லாமல் 'திருவருள்' என்றார்கள். 'திருவடிப்பேறு' என்றார்கள். இதைத்தான் சித்தர் இலக்கியம் வலியுறுத்துகின்றது!

விதியையும் அதன் கொடுமையையும், காலத்தையும் அதன் கோலத்தையும், வெல்லுவதற்கு உரிய ஒரே ஆயுதம் சரணாகதி அல்லது அடைக்கலம் என்றார்கள்.

இறைவனிடம் தஞ்சம் புகும்போது ஒரு பக்தனுக்கு விதி மாறுகிறது. காலத்தை அவன் வெல்கிறான். மார்க்கண்டேயன் சிவனிடம் தஞ்சம் புகுந்தான்; சூலாயுதம் எமனை நோக்கிப் பாய்ந்தது, என்பது புராணம் கூறுகிற ஓர் உருவகக் கதை. இதையே அருணகிரியார் தமது பக்தியின் மேலீட்டால் முருகனுடைய கால்பட்டு அயன் கையெழுத்து அழிந்தது என்று பாடினார். இது பக்தி மார்க்கம்.

சித்தர்கள் கூறுகிற தாச மார்க்கமாகிய தொண்டு நெறியும், சற்புத்திர மார்க்கமாகிய நன்மகவு நெறியும், இந்தத் திருவடி ஆற்றலையே போற்றித் துதிக்கின்றன.

இந்த விதியை மாற்றும் வேலையை யோகிகளும் ஞானிகளும் எவ்வாறு செய்கிறார்கள்? திருமூலர் பாடுகிறார்:

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே

'அவன் கால்பட்டு' என்று அருணகிரிநாதர் பாடியதையே 'சென்னியில் வைத்த சிவனருள்' என்கிறார் சித்தர். அதைக்கொண்டு முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பதும், பின்னை வினையைப் பிடித்துப் பிசைவதும் சித்தரின் ஞானச் செயல்களாகத் திகழ்கின்றன.

பக்தனுக்கு எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்புக் கொடுத்து விட்ட நிலையில் ஊழ்வினை தன்வினையாக அழிகிறது. சித்தனோ தன்னுடைய ஞானவினையினால் அந்த ஊழ்வினையை அழிக்கிறான். அது ஞானத்தின் செயல். இரண்டுமே சென்னியில் இயங்குகின்ற திருவருளின் செயல் விளைவேயாம்.

இந்த இரண்டு விதமான வெற்றிச் செயல்களின் வகைகளையும் எடுத்துக் கூறுவதே சித்தர்களின் ஞானச் செம்பொருள். இந்தச் செம் பொருளை உட்கொண்டு இயன்றனவே அவ்வையாரின் குறளும் அகவலும்.

வினையின் முடிச்சை அவிழ்க்கும் முறையையும், பின்னை வினையைப் பிடித்துப் பிசையும் முறையையும் பாடநூல் போல எடுத்து விளக்குவது அவ்வையின் குறள். விநாயகரின் திருவடியிலே நமது தலையை இட்டுச் சென்று, அந்தத் திருவடியிலே தோயும் நிலையில் வினைகள் சுழலுமாறு செய்வதே விநாயகர் அகவல்.

சித்தர்கள் கூறுகின்ற நான்கு நெறிகளிலே சகமார்க்கமாகிய யோக நெறியையும், சன்மார்க்கமாகிய ஞான நெறியையும் அறிவியல் முறையிலே பயிற்சிகளாக எடுத்துச் சொல்லி, நமக்கு ஞானக் கல்வியைப் புகட்ட எழுந்ததே அவ்வையின் குறள். நமது இதயத்தில் ஞானத்தையெல்லாம் பக்தியாகக் குழைத்து ஊட்டி, சொல்லும் மனமும் மெய்யும் உருகி ஓடுகிற முறையில் விநாயகனுடைய திருவடியிலே நம்மைக் கூட்டுவிக்கிற துதி நூலே விநாயகர் அகவல். இரண்டும் ஒரே குறிக்கோளில் எழுந்த இரண்டு வழிகளால் ஆன இரு வேறு நூல்கள்.

சாத்திரம், தோத்திரம் ஆகிய இந்த இரண்டும் இணைந்து நம் உள்ளத்தில் செல்லும் போது பக்தியே ஞானமாகவும், ஞானமே பக்தி யாகவும் பரிணமித்து இயங்கக் காண்கிறோம்! அந்த இயக்கத்தில் விதியும் காலமும் சுழன்றோடுவதும், விதியின் எழுத்து அழிவதும், காலம் என்ற தத்துவம் தனது சுழற்சியை நமக்கு நன்மை பயக்கும் விதத்தில் மாற்றிக்கொண்டு சுழல்வதும் நிகழ்கின்றன. அப்போது 'ஊழை உப்பக்கம்' காணுகின்ற உளற்றுதல் என்ற செயல் ஒரு தவச் செயலாகத்திகழ்கிறது.

'தாழாது உளற்றுதல்' என்னும் இந்தத் தவத்திற்கு நம்மை அழைத்துச் செல்வதே அவ்வையின் நூல்கள் எழுந்ததன் குறிக்கோள் ஆகும்.

3. அகவலின் ஆற்றல்

விநாயகர் அகவல் ஒரு புகழ் நூல். அதாவது விநாயகரின் பெருமைகளைச் சொல்லிப் புகழ்ந்து துதிக்கின்ற முறையில் அமைந்த நூலாகும்.

பாமாலை நூல்களின் ஒரு மரபானது, போற்றுகிற தெய்வத்தின் வல்லமைகளை வரிசையோடு கூறி வணங்குவதாகும். 'போற்றி போற்றி' என்று முடியும் வரிகள் அமைந்த நூல்களும் இந்த வகையில் அடங்கும்.

அகவல் என்ற பாவினம் போற்றித் துதிக்கும் இந்த மரபுக்கு இசைந்த யாப்பு முறை கொண்டதாகும். மாணிக்கவாசகர் போன்ற ஞானப் புலவர்களும், சித்தர் என்ற பெயரில் வழங்கி வருகிற பல கவிஞர்களும் இவ்வகையான புகழ் மாலைக்கு அகவல் யாப்பைக் கையாண்டு இருக்கிறார்கள்.

அகவல் எனினும், அகவுதல் எனினும் மனம் ஒடுங்கிய நிலையில் ஓதுதல் என்று பொருள் படும். சொல்லுதல் அல்லது மொழிதல் என்பதைவிட அகவுதல் என்ற சொல்லுக்கு இப்படி ஒரு சிறப்பான பொருள் உண்டு. வழிபடுகின்ற கடவுளிடம் மனம் திறந்து ஓதுகின்ற செயலுக்கு, இந்த அகவலின் யாப்பு மிகவும் பொருந்தியது என்பதைப் புலவர் உலகம் பலநூறு ஆண்டுகளாகக் கண்டு கடைப்பிடித்து வந்திருக்கிறது. அவ்வையாரும் தமது விநாயகர் புகழ் மாலைக்கு இநத மரபை ஒட்டியே அகவல் முறையைப் பயன்படுத்தியுள்ளார்.

விநாயகருடைய பெருமைகளை எடுத்துச் சொல்வதோடு, யோகிகள் வழிபடுகின்ற ஞானச் சின்னங்களை வரையறை செய்து வகுத்துக் கூறுவதும், விநாயகர் அகவலின் தனிப்பெரும் சிறப்பாகும். திருமுருகாற்றுப்படை என்னும் நக்கீரர் படைப்பிலும் இந்த நுட்பங்கள் நன்கு பயின்று வருவதைப் புலவர் உலகம் நன்கு அறியும்.

சித்தர்களின் ஞான நுட்பங்களைத் தன்னுள் அடக்கியுள்ள நூல் என்பதோடு கூட, அவ்வையாரின் விநாயகர் அகவல் வேறு சில தனிப் பெருமைகளையும் தன்னுள் பொதிந்து திகழ்கிறது.

இறைவனிடம் தஞ்சம் புகும்போது ஒரு பக்தனுக்கு விதி மாறுகிறது. காலத்தை அவன் வெல்கிறான். மார்க்கண்டேயன் சிவனிடம் தஞ்சம் புகுந்தான்; சூலாயுதம் எமனை நோக்கிப் பாய்ந்தது, என்பது புராணம் கூறுகிற ஓர் உருவகக் கதை. இதையே அருணகிரியார் தமது பக்தியின் மேலீட்டால் முருகனுடைய கால்பட்டு அயன் கையெழுத்து அழிந்தது என்று பாடினார். இது பக்தி மார்க்கம்.

சித்தர்கள் கூறுகிற தாச மார்க்கமாகிய தொண்டு நெறியும், சற்புத்திர மார்க்கமாகிய நன்மகவு நெறியும், இந்தத் திருவடி ஆற்றலையே போற்றித் துதிக்கின்றன.

இந்த விதியை மாற்றும் வேலையை யோகிகளும் ஞானிகளும் எவ்வாறு செய்கிறார்கள்? திருமூலர் பாடுகிறார்:

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே

'அவன் கால்பட்டு' என்று அருணகிரிநாதர் பாடியதையே 'சென்னியில் வைத்த சிவனருள்' என்கிறார் சித்தர். அதைக்கொண்டு முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பதும், பின்னை வினையைப் பிடித்துப் பிசைவதும் சித்தரின் ஞானச் செயல்களாகத் திகழ்கின்றன.

பக்தனுக்கு எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்புக் கொடுத்து விட்ட நிலையில் ஊழ்வினை தன்வினையாக அழிகிறது. சித்தனோ தன்னுடைய ஞானவினையினால் அந்த ஊழ்வினையை அழிக்கிறான். அது ஞானத்தின் செயல். இரண்டுமே சென்னியில் இயங்குகின்ற திருவருளின் செயல் விளைவேயாம்.

இந்த இரண்டு விதமான வெற்றிச் செயல்களின் வகைகளையும் எடுத்துக் கூறுவதே சித்தர்களின் ஞானச் செம்பொருள். இந்தச் செம் பொருளை உட்கொண்டு இயன்றனவே அவ்வையாரின் குறளும் அகவலும்.

வினையின் முடிச்சை அவிழ்க்கும் முறையையும், பின்னை வினையைப் பிடித்துப் பிசையும் முறையையும் பாடநூல் போல எடுத்து விளக்குவது அவ்வையின் குறள். விநாயகரின் திருவடியிலே நமது தலையை இட்டுச் சென்று, அந்தத் திருவடியிலே தோயும் நிலையில் வினைகள் சுழலுமாறு செய்வதே விநாயகர் அகவல்.

சித்தர்கள் கூறுகின்ற நான்கு நெறிகளிலே சகமார்க்கமாகிய யோக நெறியையும், சன்மார்க்கமாகிய ஞான நெறியையும் அறிவியல் முறையிலே பயிற்சிகளாக எடுத்துச் சொல்லி, நமக்கு ஞானக் கல்வியைப் புகட்ட எழுந்ததே அவ்வையின் குறள். நமது இதயத்தில் ஞானத்தையெல்லாம் பக்தியாகக் குழைத்து ஊட்டி, சொல்லும் மனமும் மெய்யும் உருகி ஓடுகிற முறையில் விநாயகனுடைய திருவடியிலே நம்மைக் கூட்டுவிக்கிற துதி நூலே விநாயகர் அகவல். இரண்டும் ஒரே குறிக்கோளில் எழுந்த இரண்டு வழிகளால் ஆன இரு வேறு நூல்கள்.

சாத்திரம், தோத்திரம் ஆகிய இந்த இரண்டும் இணைந்து நம் உள்ளத்தில் செல்லும் போது பக்தியே ஞானமாகவும், ஞானமே பக்தி யாகவும் பரிணமித்து இயங்கக் காண்கிறோம்! அந்த இயக்கத்தில் விதியும் காலமும் சுழன்றோடுவதும், விதியின் எழுத்து அழிவதும், காலம் என்ற தத்துவம் தனது சுழற்சியை நமக்கு நன்மை பயக்கும் விதத்தில் மாற்றிக்கொண்டு சுழல்வதும் நிகழ்கின்றன. அப்போது 'ஊழை உப்பக்கம்' காணுகின்ற உளற்றுதல் என்ற செயல் ஒரு தவச் செயலாகத்திகழ்கிறது.

'தாழாது உளற்றுதல்' என்னும் இந்தத் தவத்திற்கு நம்மை அழைத்துச் செல்வதே அவ்வையின் நூல்கள் எழுந்ததன் குறிக்கோள் ஆகும்.

3. அகவலின் ஆற்றல்

விநாயகர் அகவல் ஒரு புகழ் நூல். அதாவது விநாயகரின் பெருமைகளைச் சொல்லிப் புகழ்ந்து துதிக்கின்ற முறையில் அமைந்த நூலாகும்.

பாமாலை நூல்களின் ஒரு மரபானது, போற்றுகிற தெய்வத்தின் வல்லமைகளை வரிசையோடு கூறி வணங்குவதாகும். 'போற்றி போற்றி' என்று முடியும் வரிகள் அமைந்த நூல்களும் இந்த வகையில் அடங்கும்.

அகவல் என்ற பாவினம் போற்றித் துதிக்கும் இந்த மரபுக்கு இசைந்த யாப்பு முறை கொண்டதாகும். மாணிக்கவாசகர் போன்ற ஞானப் புலவர்களும், சித்தர் என்ற பெயரில் வழங்கி வருகிற பல கவிஞர்களும் இவ்வகையான புகழ் மாலைக்கு அகவல் யாப்பைக் கையாண்டு இருக்கிறார்கள்.

அகவல் எனினும், அகவுதல் எனினும் மனம் ஒடுங்கிய நிலையில் ஓதுதல் என்று பொருள் படும். சொல்லுதல் அல்லது மொழிதல் என்பதைவிட அகவுதல் என்ற சொல்லுக்கு இப்படி ஒரு சிறப்பான பொருள் உண்டு. வழிபடுகின்ற கடவுளிடம் மனம் திறந்து ஓதுகின்ற செயலுக்கு, இந்த அகவலின் யாப்பு மிகவும் பொருந்தியது என்பதைப் புலவர் உலகம் பலநூறு ஆண்டுகளாகக் கண்டு கடைப்பிடித்து வந்திருக்கிறது. அவ்வையாரும் தமது விநாயகர் புகழ் மாலைக்கு இநத மரபை ஒட்டியே அகவல் முறையைப் பயன்படுத்தியுள்ளார்.

விநாயகருடைய பெருமைகளை எடுத்துச் சொல்வதோடு, யோகிகள் வழிபடுகின்ற ஞானச் சின்னங்களை வரையறை செய்து வகுத்துக் கூறுவதும், விநாயகர் அகவலின் தனிப்பெரும் சிறப்பாகும். திருமுருகாற்றுப்படை என்னும் நக்கீரர் படைப்பிலும் இந்த நுட்பங்கள் நன்கு பயின்று வருவதைப் புலவர் உலகம் நன்கு அறியும்.

சித்தர்களின் ஞான நுட்பங்களைத் தன்னுள் அடக்கியுள்ள நூல் என்பதோடு கூட, அவ்வையாரின் விநாயகர் அகவல் வேறு சில தனிப் பெருமைகளையும் தன்னுள் பொதிந்து திகழ்கிறது.

இறைவனிடம் தஞ்சம் புகும்போது ஒரு பக்தனுக்கு விதி மாறுகிறது. காலத்தை அவன் வெல்கிறான். மார்க்கண்டேயன் சிவனிடம் தஞ்சம் புகுந்தான்; சூலாயுதம் எமனை நோக்கிப் பாய்ந்தது, என்பது புராணம் கூறுகிற ஓர் உருவகக் கதை. இதையே அருணகிரியார் தமது பக்தியின் மேலீட்டால் முருகனுடைய கால்பட்டு அயன் கையெழுத்து அழிந்தது என்று பாடினார். இது பக்தி மார்க்கம்.

சித்தர்கள் கூறுகிற தாச மார்க்கமாகிய தொண்டு நெறியும், சற்புத்திர மார்க்கமாகிய நன்மகவு நெறியும், இந்தத் திருவடி ஆற்றலையே போற்றித் துதிக்கின்றன.

இந்த விதியை மாற்றும் வேலையை யோகிகளும் ஞானிகளும் எவ்வாறு செய்கிறார்கள்? திருமூலர் பாடுகிறார்:

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே

'அவன் கால்பட்டு' என்று அருணகிரிநாதர் பாடியதையே 'சென்னியில் வைத்த சிவனருள்' என்கிறார் சித்தர். அதைக்கொண்டு முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பதும், பின்னை வினையைப் பிடித்துப் பிசைவதும் சித்தரின் ஞானச் செயல்களாகத் திகழ்கின்றன.

பக்தனுக்கு எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்புக் கொடுத்து விட்ட நிலையில் ஊழ்வினை தன்வினையாக அழிகிறது. சித்தனோ தன்னுடைய ஞானவினையினால் அந்த ஊழ்வினையை அழிக்கிறான். அது ஞானத்தின் செயல். இரண்டுமே சென்னியில் இயங்குகின்ற திருவருளின் செயல் விளைவேயாம்.

இந்த இரண்டு விதமான வெற்றிச் செயல்களின் வகைகளையும் எடுத்துக் கூறுவதே சித்தர்களின் ஞானச் செம்பொருள். இந்தச் செம் பொருளை உட்கொண்டு இயன்றனவே அவ்வையாரின் குறளும் அகவலும்.

வினையின் முடிச்சை அவிழ்க்கும் முறையையும், பின்னை வினையைப் பிடித்துப் பிசையும் முறையையும் பாடநூல் போல எடுத்து விளக்குவது அவ்வையின் குறள். விநாயகரின் திருவடியிலே நமது தலையை இட்டுச் சென்று, அந்தத் திருவடியிலே தோயும் நிலையில் வினைகள் சுழலுமாறு செய்வதே விநாயகர் அகவல்.

சித்தர்கள் கூறுகின்ற நான்கு நெறிகளிலே சகமார்க்கமாகிய யோக நெறியையும், சன்மார்க்கமாகிய ஞான நெறியையும் அறிவியல் முறையிலே பயிற்சிகளாக எடுத்துச் சொல்லி, நமக்கு ஞானக் கல்வியைப் புகட்ட எழுந்ததே அவ்வையின் குறள். நமது இதயத்தில் ஞானத்தையெல்லாம் பக்தியாகக் குழைத்து ஊட்டி, சொல்லும் மனமும் மெய்யும் உருகி ஓடுகிற முறையில் விநாயகனுடைய திருவடியிலே நம்மைக் கூட்டுவிக்கிற துதி நூலே விநாயகர் அகவல். இரண்டும் ஒரே குறிக்கோளில் எழுந்த இரண்டு வழிகளால் ஆன இரு வேறு நூல்கள்.